வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 31.10.2024 வியாழக்கிழமை | இதழ் : 304 | பக்கங்கள் : 12




# தமிழ் மக்களை தேசிய இனமாக புதிய அரசமைப்பு ஏற்கவேண்டும்

## ஜ. த. தே. கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனம்!

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 31

**இனப்பிரச்னையை தீர்க்கும் நோக்கில் உருவாக்க வேண்டிய இலங்கை தீவின் புதிய யாப்பானது தமிழ் மக்களை இறைமையும் - சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் - இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி நேற்று வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி நேற்று யாழ்ப்பாணத்தில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது.

கூட்டணியின் பங்காளிக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சித்தார்த்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உடைவு, தமிழ் மக்களின் பிரதான பிரச்னைகள் எனப் பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய

11

## புதிய புரட்சிக்கு வழிவகுப்பதாக தீபாவளியை கொண்டாடுவோம்

### ஜனாதிபதி அநுர குமார வாழ்த்து



கொழும்பு, ஒக். 31

அஞ்ஞானத்தின் இருளைப் போக்க மெய்ஞானத்தின் ஒளியால் மட்டுமே முடியும் என்ற தொனியில் தீபங் களை ஏற்றி இலங்கையர்களாக புதிய புரட்சிக்கு வழி வகுப் பதாக இம்முறை தீபாவளி பண்டிகையை

11

## ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும்!

### பரீட்சைகள் ஆணையர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 31

2024ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் 20ஆம் திகதி வரை நடைபெறும். இதற்கான ஏற்பாடுகள் தயாராகி வருகின்றன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

அத்துடன், உயர்தரப் பரீட்சைக்கான கால அட்டவணையை பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து

11

## சின்னம்மை பரவலை கட்டுப்படுத்த தடுப்பூசி

கொழும்பு, ஒக். 31

வேகமாகப் பரவி வரும் சின்னம்மையை கட்டுப்படுத்த தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை அம்மை தடுப்பூசி வழங்கும் விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்தவை வருமாறு,

20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட இரண்டு

11



## கொங்கிறீட் கல்லால் தாக்கி கணவன், மனைவி கொலை!

### பருத்தித்துறையில் கொடூரம்

- எஸ். தில்லைநாதன் -

வடமராட்சி, ஒக். 31

கொங்கிறீட் கல்லால் தலையில் தாக்கி கணவனும் மனைவியும் படுகொலை செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை - கற்கோவளம் - புனிதநகர் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை இவர்களின் சடலம் அவர்களின் வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில்

11

## புதிய மாற்றத்துக்கு எதிராகவே அரசாங்கம் செயல்படுகின்றது!

### கஜேந்திரகுமார் சாடல்

யாழ்ப்பாணம், ஒக். 31

புதிய மாற்றத்தை ஏற்படுத்துவதாகக்கூறி ஆட்சிப் பீடமேறிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது அதற்கு எதிர்மாறாகவே செயல்பட்டு வருகிறது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குவதா இல்லையா என்பதை அரசாங்கம் அமைந்த

11

## அர்ச்சுனாவுக்கு பிடியாணை!

மன்னார், ஒக். 31

மருத்துவர் அர்ச்சுனாவை கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு மன்னார் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் மருத்துவமனைக்குள் புகுந்து முறையற்ற விதத்தில் செயல்பட்ட மருத்துவர் அர்ச்சுனா மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு, நேற்று புதன்கிழமை

11




## 1,000ஐ கடந்தன விதி மீறல்கள்!

கொழும்பு, ஒக். 31

பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை (செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை) ஆயிரத்து 42 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு

11

## அதீத ஹெரோயின் பாவனை; உரும்பிராயில் இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 31

ஹெரோயின் போதைப் பொருளை அதிகளவில் உள்ளெடுத்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

உரும்பிராயில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த இளைஞர் ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையாக இருந்தார். சிறிது காலம் திருந்தி வாழ்ந்த அவர் நேற்றுமுன்தினம் நண்பர்களுடன் சேர்ந்து ஹெரோயினை உள்ளெடுத்துள்ளார். இதையடுத்து வாயிலிருந்து நுரைதள்ளிய நிலையில் அவர் உயிரிழந்தார்.

அதிக ஹெரோயின் உட்கொண்டதே மரணத்துக்கு காரணமென பிரேத பரிசோதனையில் தெரிய வந்தது.

கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## மின் கட்டணம் குறைக்கப்படும்!

### ஜனாதிபதி அநுர

கொழும்பு, ஒக். 31

அடுத்த சில வருடங்களில் மின்சாரக் கட்டணத்தை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்க தாம் எதிர்பார்த்துள்ளார் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

இலங்கை வணிக சபையின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலிலேயே அவர் இதனைக்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

வெளிநாடுகளில் பல மாடிக் கட்டடங்களை இடித்து அழிக்க வேண்டும் என்றால், எப்படி செய்கிறார்களோ தெரியவில்லை. ஆனால், பல மாடிக் கட்டடம் இருந்த இடத்திலேயே பொடிப்பொடியாக அப்படியே அமர்ந்துவிடும்.

அருகில் உள்ள மாடிக்கட்டடங்களுக்குக் கூட எதுவும் ஆகிவிடாது. அப்படியே அது நின்ற இடத்தியே அமர்ந்துவிடுவதுபோல அமர்ந்துவிடும். இப்படி அழிக்கப்பட்ட காட்சிகளை இப்போதும் யூரியூப் தளத்தில் காணலாம்.

அதுபோலத்தான், அந்தச் செய்தியைக் கேட்டபோது, எனக்கு ஒரு கட்டடமே இடிந்து விழுந்ததுபோல இருந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸநாயக்கா வெற்றிபெறுவார் என்று இந்த ஊர்க்குருவி நம்பியதில்லை. அதற்குக் காரணம், மூன்று வீத வாக்குகளுடன் இருந்த ஒரு கட்சியால் அவ்வளவு தூரத்துக்கு பாயமுடியாது என்ற நம்பிக்கை. அதைவிட, தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னரும்கூட ஒரு ஜே. வி. பி. தோழர், "நாங்கள் மிகப்பெரிய வெற்றி பெறுவோம் என்றாலும், எமது இலக்கு எதிர்க்கட்சி தலைமைதான்" என்று சொன்னதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும், ஊழலுக்கு எதிரான அவர்களின் கோஷத்துக்குக் கிடைத்த மகத்தான மக்கள் ஆணையை அவர்கள் நிச்சயம் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையும் கூடவே வந்தது.

எதிர்க்கட்சியில் இருந்தபோது, பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக பல்வேறு போராட்டங்களை நடத்தியவர்கள் அவர்கள். தமிழ் அரசு கட்சி வடக்கிலிருந்து தெற்கு வரை பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரி கையெழுத்துப் பெறும் போராட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியபோது, அந்த ஊர்தி தெற்குக்கு போனபோது ஜே. வி. பியினர் மகத்தான வரவேற்பை வழங்கி ஆதரவு வழங்கினர்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஆளும் அரசாங்கங்கள் எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்கும் அவர்களின் போராட்டங்களை தடுப்பதற்கும் பயன்படுத்தியபோது, அந்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று போராட்டங்களை நடத்திய ஜே. வி. பியினர், இப்போது தாங்கள் ஆளும் கட்சியில் அமர்ந்ததும் அதாவது பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தும் அதிகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான தம்மிடம் வந்ததும் அது பற்றிய தமது எண்ணங்களை மாற்றிக் கொண்டுவிட்டனரோ என்று எண்ண வேண்டியிருக்கின்றது.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் விஜித ஹேரத், "பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் தற்போது எந்த கலந்துரையாடலும் இடம்பெறவில்லை எனவும் அது தொடர்ந்தும் இருக்கும்" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சில வேளை, தமது கட்சியை சேர்ந்த ஒருவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி கதிரையில் அமர்ந்துவிட்ட காரணத்தால், அவர் அந்தச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்தப் போவதில்லை என்பதால் அது இருந்தாலும் பரவாயில்லை என்று முடிவெடுத்திருக்கலாம். ஆனால், அதனை அவர் பதவியில் இருக்கும் காலத்திலேயே நீக்குவது அல்லது திருத்துவது என்பதில் உறுதியாக இருக்கவேண்டும்.

மேலே கட்டடம் இடிந்து விழுந்தது ஞாபகத்துக்கு வந்தது என்று நான் சொன்னது, இந்த பயங்கரவாதத் தடைச்சட்ட விவகாரத்தில் ஜே. வி. பி. புதிய நிலைப்பாடு எடுத்தது என்பதால் அல்ல.

நண்பர் ஒருவர் தெரிவித்த வேறு ஒரு சமாசாரம் காரணமாகவே. அவர் ஒரு சட்டத்தரணி. நேர்மையான மனிதர். அவரின் நேர்மையை பற்றி சொல்லும் போது நான் அடிக்கடி சொல்வது, "நேர்மை இருக்கவேண்டும்தான். ஆனால், அதற்காக இப்படி நேர்மையாக இருக்கக்கூடாது" என்று.

அவர் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டார், "…அவரை ஏன் அந்தப் பதவியில் இருந்து இரண்டு நாட்களிலேயே தூக்கினார்கள்" என்று.

வடக்கில் உள்ள ஓர் அரச நிறுவனத்துக்குத் தலைவராக நியமிக்கப்பட்ட ஒருவரை ஒரு நாளிலேயே பதவியில் இருந்து நீக்கிவிட்டு புதிதாக ஒருவரை நியமித்தமை பற்றியே அவர் கேட்டார். எனக்கு அந்த விடயம் தெரிந்திருக்கவில்லை. அவரிடம் எனக்கு தெரியாது பற்றி சொல்லிவிட்டு கேட்டேன், அந்த நியமனத்தில் உங்களுக்கு என்ன அக்கறை என்று. அதற்கு அவர் சொன்னர், "முதலில் நியமிக்கப்பட்டவர் நேர்மையானவர் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால் புதியவர் பற்றி ஒரு கதையே சொல்கிறேன்" என்றார்.

தனது நண்பர் ஒருவர், புதிதாக கடலட்டை பண்ணை தொடங்குவதற்கு ஒருவர் ஆலோசனை சொல்கிறார். அவரை சந்திக்கச் செல்லும்போது நீங்களும் வாருங்கள் என்று கேட்டிருந்தாராம். அதனால், அவருடன் சென்று அந்த ஆலோசகரை சந்தித்தாராம்.

வடக்கில் புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஆலோசனை வழங்குவதாகக் கூறிக்கொண்டு அவர் ஓர் அலுவலகத்தையே நடத்திக்கொண்டிருந்தார். அங்கே சென்று அவரின் ஆலோசனை பெறுவதற்கும் முதலிலேயே ஒரு தொகை கட்டணம் செலுத்தவேண்டும். இந்த சட்டத்தரணியின் நண்பரும் அப்படி கட்டணம் செலுத்திவிட்டுத்தான், அங்கே சென்றிருந்தார்.

அவர்கள் அங்கே போனதும், அவர் முதலில் கேட்டது: "உங்களுக்கு முதல் மாதமே பத்து இலட்சம் ரூபாய் இலாபம் வந்தால் காணும்தானே?".

பின்னர் ஒரு கடல் பகுதியின் வரைபடத்தைக் காட்டி, இந்த கடலில் இந்தப் பகுதியை நேற்றுத்தான்…. (ஒருவர் பெயரைச்சொல்லி) அவர் 'புக்' பண்ணிவிட்டு போகிறார். நீங்கள் விரும்பினால் மற்றைய பகுதியை உங்களுக்கு தரலாம்" என்றாராம்.

அவரிடம் முதல்நாள் புக் பண்ணியவர் ஒரு பிரமுகர். சட்டத்தரணிக்கு அவரின் புரட்டு புரிந்துவிட்டது. நண்பரையும் அழைத்துக்கொண்டு வெளியேறி விட்டார்.

வெளியே வந்தவர், அந்த பிரமுகருக்கு அழைப்பெடுத்து கடல்அட்டைப் பண்ணைக்கு புக் பண்ணினீர்களா? என்று கேட்க, அவர் அந்த நபரைப் பற்றியே தான் கேள்விப்படவில்லையே என்றிருக்கிறார்.

ஒரு நல்ல நிர்வாகியை மாற்றிவிட்டு புதிய அரசு இப்படியொருவரை நியமித்திருக்கிறதே என்பதுதான் சட்டத்தரணி நண்பரின் கவலை எல்லாம்.

இனி என்ன, தூரத்தில் பனை மரங்கள் நிற்பது போல நமக்கு காட்சியளிக்கும். ஆனால், அருகே சென்று பார்த்தால் பனை மரங்கள் இருக்காது!

- ஊர்க்குருவி.

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று போராட்டம்



கிளிநொச்சி, ஒக். 31

காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவுகளுக்கு நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டம் நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது. சங்கத்துக்கு முன்பாக யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதையும் உள்நாட்டு பொறிமுறையையோ அல்லது இழப்பீடுகளை வழங்குவதையோ நாம் ஏற்கவில்லை. அரசாங்கம் தொடர்ந்தும் எங்களை ஏமாற்றி வருகிறது. சர்வதேச மட்டத்திலான விசாரணை மூலமே எமக்கு தீர்வு கிட்டும்", என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து வெளியிட்டனர்.

## மின்சார சபையின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம்!

யாழ்ப்பாணம், ஒக். 31

இலங்கை மின்சார சபையின் 55 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதியிலுள்ள இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்தில் இந்த இரத்ததான முகாம் நடைபெறும்.

இலங்கை மின்சார சபையின் வட மாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டு சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த இரத்த தான முகாமில் வட மாகாண உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பங்கேற்கவுள்ளனர். பொது மக்களும் பங்கேற்று இரத்ததானம் வழங்க முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

## பனை அபிவிருத்தி சபையின் தலைவர் கடமையை ஏற்றார்



யாழ்ப்பாணம், ஒக். 31

பனை அபிவிருத்தி சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட விநாயகமூர்த்தி சகாதேவன் நேற்றைய தினம் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார, வவுனியா பல்கலைக்கழக வேந்தர் மோகனதாஸ், பனை அபிவிருத்தி சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-05)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
31.10.2024 வியாழக்கிழமை
ඊළනාඩු
பிலவ வருடம், ஐப்பசி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் மக்களின் பெருங்கவலை

அடுத்த பாராளுமன்றத்தில் தங்களின் பிரதிநிதித்துவம் கட்டுறுதியானதாக இல்லாமல் சிதறுண்டதாக இருக்கப் போகிறது என்று வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் பெரும் கலையடைந்திருக்கிறார்கள். அதாவது, ஒவ்வொரு தமிழ்க் கட்சியும் ஓரிரு உறுப்பினர்களுடன் பாராளுமன்றத்துக்கு செல்லும் பட்சத்தில் தங்களின் பிரச்னைகள் குறித்து ஒன்றுபட்ட முறையில் குரல் கொடுப்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதே அவர்களின் மனக்குறை.

தேர்தலில் களத்தில் இருக்கும் மிகவும் பழைய தமிழ் அரசியல் கட்சிகள் என்றால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற அவதாரத்துடன் இருக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியுமேயாகும். அடுத்ததாக தமிழ் காங்கிரஸும் தமிழ் அரசுக் கட்சியும் அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலத்துக்கு முன்னர் கூட்டுச் சேர்ந்து அமைத்த தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி. மூத்த அரசியல்வாதி வீரசிங்கம் ஆனந்தசங்கரி தலைமையில் அது வெறுமனே பெயர்ப் பலகையுடன் இருக்கிறது. என்றாலும் தேர்தலில் போட்டியிடுவதற்கு சில நபர்களை அதனால் தேடிக்கொள்ள முடிந்தது.

முன்னைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளாக இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலம் இருந்த முன்னாள் தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களின் தலைமையிலான கட்சிகள் இப்போது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்ற பெயரில் தேர்தலில் போட்டியிடுகின்றன. மற்றையது முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி. இவற்றை விடவும் பல்வேறு உதிரி தமிழ்க் கட்சிகளும் மூன்று முச்சக்கர வண்டிகளில் ஏற்றுவதற்குக்கூட போதாத எண்ணிக்கையான உறுப்பினர்களுடன் இருக்கின்றன. அவற்றைப் பற்றி எழுதி எமது நேரத்தையும் இடத்தையும் வீணாக்க விரும்பவில்லை.

இந்தக் கட்சிகள் சகலவற்றினதும் தலைவர்கள் சில வருடங்களுக்கு முன்னர் வரை ஒன்றிணைந்து செயல்பட்டவர்களே. இன்றும்கூட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை தவிர ஏனையவை தேசிய இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வைப் பொறுத்தவரை, பெருமளவுக்கு ஒரே நிலைப்பாட்டைக் கொண்டவையே. பிரிந்து செயல்படுவதற்கு பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலும் தலைவர்கள் மத்தியிலான தன்னகம்பாவ போட்டியையும் தவிர, வேறு ஏதாவது உருப்படியான காரணம் இருப்பதாகக் கூறுவதற்கில்லை.

குறிப்பாக, வடக்கு - கிழக்கில் பரவலாகத் தமிழ் மக்களின் ஆதரவை கொண்டிருந்த தமிழ் அரசு கட்சி இந்த வருட ஆரம்பத்தில் அதன் தலைவர் பதவிக்கான தேர்தலையடுத்து கடுமையான உள் முரண்பாடுகளுக்கு உள்ளாகியிருக்கிறது. வெளிப்படையாகச் சொல்வதானால் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற சிவஞானம் சிறீதரனுக்கும் மதியாபரணம் சுமந்திரனுக்கும் இடையிலான எந்தவித மறைப்புக்கும் இடமில்லாத போட்டா போட்டியில் கட்சி சிக்கித் தவிக்கிறது. தலைவர் தேர்தலில் வெற்றிபெற முடியாமல் போனவர் தமிழ் அரசுக் கட்சியை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரக்கூடியதாக இருந்த அதேவேளை வெற்றி பெற்றவர் எதையும் செய்ய முடியாமல் கைகட்டிப் பார்த்துக் கொண்டு நிற்கும் விநோதமான ஒரு நிலை. ஒரே வேட்பாளர் பட்டியலில் இருவரும் இருக்கின்ற போதிலும் பிரசார பேச்சுகளில் பகைமை உட்கிடையாக இருக்கிறது.

வேட்பாளர் நியமனம் கிடைக்கவில்லை என்று மனமுடைந்த ஒரு பிரிவினர் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து வெளியேறி ஜனநாயக தமிழரசு என்ற பெயரில் “தடம்மாறாத தமிழ்த் தேசியம்” என்ற சுலோகத்தை முன்வைத்து சுயேச்சை குழுவாக தேர்தல் களத்தில் நிற்கிறார்கள்.

இத்தகைய ஒரு பின்புலத்தில் இவர்கள் மத்தியில் இருந்தே தங்களின் பாராளுமன்ற பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டிய பரிதாப நிலையில் தமிழ் மக்கள். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் பக்கம் தமிழ் மக்கள் கணிசமானளவு திரும்பி விடுவார்களோ என்ற பயம் வேறு தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மரியன்னைக்கு பெருநாள் திருப்பலி!



*யாழ்ப்பாணம், ஒக். 31*

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள மரியன்னை சிற்றாலயத்தின் பெருநாள் திருப்பலி நேற்று புதன்கிழமை காலை ஒப்புக் கொடுக்கப்பட்டது.

யாழ். மறைக்கல்வி நடுவு நிலைய இயக்குநர் அருட்பணி வின்சன் அடிகளார் யாழ். அகவொளி நிறுவனத்தின் உதவி இயக்குநர் அருட்பணி எம். அன்ரன் ஜெரால்ட் அடிகளார் ஆகியோரின் பங்கேற்புடன் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் வாழ்த்துரை வழங்கினார். மாதாவின் திருச்சொரூபம் சிற்றாலயத்தில் இருந்து பிரதான மண்டபத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு பிரதான மண்டபத்தில் திருப்பலி இடம்பெற்றது.

நிகழ்வை கலாசாலை கிறிஸ்தவ மன்றத்தின் பொறுப்பு விரிவுரையாளர் பிரபாலினி தனம், கிறிஸ்தவ பாட விரிவுரையாளர் ஜே. பாலகுமார் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதியின் வழிப்படுத்தலில் விரிவுரையாளர் ஜேம்ஸின் பங்கேற்புடன் மாணவ ஆசிரியர்களும் திருப்பலி பூசையில் பங்குபற்றினர். (ஐ)

# யாழ். பல்கலை நூலகத்தில் தமிழியல் பிரிவு திறப்பு!



*யாழ்ப்பாணம், ஒக். 31*

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமிழியலுக்கென்று தனி நூலகப் பிரிவொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கைத் தமிழியல் சேகரிப்புகளை எண்ணிமப் படுத்தல் மற்றும் பாதுகாத்தல் செயல்திட்டத்தின் கீழ், எண்ணிம ஆவணக் காப்பகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் காணப்படக்கூடிய தமிழியல் சார்ந்த தொகுப்புகளை சேகரித்து பாதுகாக்க வேண்டும், தமிழியல் மாணவர்களின் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி முதலான அறிவுசார் செயல்பாடுகளுக்கு உதவும் வகையிலமைந்த நூலகத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, நன்கொடையாளர் சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசன் நிதியத்தின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் தமிழியல் நூலகப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.. சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த நூலகப் பிரிவைத் திறந்து வைத்தார். நிகழ்வில் பேரவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# வாக்களிக்கும் முறை தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு செயலமர்வு

*யாழ்ப்பாணம், ஒக். 31*

பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் முறை பற்றி உத்தியோகத்தர்களால் மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான செயலமர்வு தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபன் தலைமையில் நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்பது பற்றி மக்களுக்கு தெளிவூட்டல் செயல்பாடுகளில் ஈடுபடுபடவுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உதவி பிரதேச செயலாளர்கள், நிர்வாக கிராம அலுவலர்கள்; பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கே இந்த செயலமர்வு நடைபெற்றது. இதில், உதவித் தேர்தல் ஆணையாளர் இ. கி. அமல்ராஜ் விளக்கங்களை அளித்தார்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 31 வியாழக்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 14
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சதுர்த்தசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் தங்கும். நீண்ட நாட்களாக செல்ல நினைத்திருந்த இடத்திற்கு சென்று வருவீர்கள்.

**இடபம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத்தொடங்குவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லைகுறையும்.

**மிதுனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராதஒரு வேலை முடியும். தாயாருடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். புதுவேலை கிடைக்கும்.

**கடகம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். அதிகாரப் பதவிகளில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். நீண்ட நாட்களாக தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். முன்கோபம் குறையும். உடல் நிலை சீராகும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். உங்களைப் பற்றி தவறாக சிலர் பேசினாலும் வருத்தப்படாதீர்கள்.

**துலாம்**
இன்றைய தினம் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. லாபம் ஈட்டுவீர்கள்.

**விருட்சிகம்**
புதிய கோணத்தில் பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்ய வழிபிறக்கும்.

**தனுசு**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர்கள், நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**மகரம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். ஆடை ஆபரணம் சேரும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் தொடங்குவதால் தெளிவான முடிவுகள் எடுக்கமுடியாமல் குழம்புவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் நிறை குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள்.

**மீனம்**
உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். பிள்ளைகளால் மதிப்பு கூடும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும் பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள்.


# தபால் மூல வாக்களிப்பு நேற்று முல்லையில் அமைதியாக நடந்தது!

முல்லைத்தீவு, ஒக். 31

பாராளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைதியான முறையில் நேற்று நடைபெற்றது.

நாட்டில் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று நாடு முழுவதும் ஆரம்பமானது. நாளை வெள்ளிக்கிழமையும் எதிர்வரும் 4ஆம் திகதியும் தபால் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

இந்த மூன்று நாட்களிலும் வாக்களிக்கத் தவறியவர்கள் எதிர்வரும் நவம்பர் 7, 8ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும்.




இந்த நிலையில், நேற்றைய தினம் முல்லைத்தீவில் மாவட்ட செயலகம், மாவட்ட தேர்தல் அலுவலகம் மற்றும் பொலிஸ் நிலையங்கள் அடங்கலாக 11 வாக்களிப்பு நிலையங்களில் தபால் மூல வாக்களிப்பு நடைபெற்றது.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் முல்லைத்தீவு தொகுதியில் 3 ஆயிரத்து 947 பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்கு இந்தத் தேர்தலில் தகுதி பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மதுபானசாலை அனுமதி பத்திரத்துக்கு எதிரான கடிதத்துக்கு இடைக்கால தடை!

மன்னார், ஒக். 31

மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் மதுபானசாலை ஒன்றை நடத்துவதற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை இடைநிறுத்தி மதுவரி ஆணையாளர் நாயகதால் அனுப்பப்பட்ட கடிதத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த மதுபானசாலை உரிமையாளரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் மகேன் கோபல்லவ ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், குறித்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள மதுவரி ஆணையாளர் நாயகம், மன்னார் பிரதேச செயலாளர் உள்ளிட்ட தரப்பினருக்கு அழைப்பாணை விடுப்பதற்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, குறித்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் 17ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# தபால் மூல வாக்களிப்பு வவுனியாவிலும் நடந்தது



வவுனியா, ஒக். 31

பாராளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு வவுனியா மாவட்டத்தில் நேற்று நடைபெற்றது.

காலை 8.30 மணி தொடக்கம் வவுனியா மாவட்ட செயலகம், உதவி தேர்தல் ஆணையாளர் பணிமனை மற்றும் பொலிஸ் நிலையங்களில் அரச உத்தியோகத்தர்கள் தமது வாக்கை செலுத்தினர்.

வன்னித் தேர்தல் மாவட்டத்தின் வவுனியா தொகுதியில் 5 ஆயிரத்து 924 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று நாடு முழுவதும் ஆரம்பமானது. நாளை வெள்ளிக்கிழமையும் எதிர்வரும் 4ஆம் திகதியும் தபால் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது. இந்த மூன்று நாட்களிலும் வாக்களிக்கத் தவறியவர்கள் எதிர்வரும் நவம்பர் 7, 8ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# துர்க்காதேவிக்கு விசேட அபிஷேகம்!

யாழ்ப்பாணம், ஒக். 31

பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் தீபாவளித் திருநாளான இன்று வியாழக்கிழமை விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

இன்று காலை 7 மணிக்கு துர்க்கை அம்பாளுக்குச் விசேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து காலை 08 மணிக்கு பூசை வழிபாடுகளும் நடைபெறுமென ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

(ஐ)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஒக். 31

நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த கந்தசஷ்டி விரதத் திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் இராஜேந்திர சுவாமிநாத குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை சூரசம்ஹாரம் நடைபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் அடுத்த நாள் 9ஆம் திகதி சனிக்கிழமை திருக்கல்யாண திருவிழாவும் நடைபெறவுள்ளன.

பெருந் திருவிழா நாட்களில் தினமும் முற்பகல் 11.00 மணிக்கு சூரபன்மன் வதைபடல படிப்பு நடைபெறவுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுகம்குடா தாக்குதல் திட்டத்தின் பின்னணியில் ஹிஸ்புல்லா அமைப்பு

## மொசாட்டே தகவலறிந்து எச்சரித்தது

கொழும்பு, ஒக். 31

**அறுகம் குடா தாக்குதல் சதித் திட்டத்தின் பின்னணியில் ஹிஸ்புல்லா அமைப்பு உள்ளது என்றும் தாக்குதல் திட்டம் குறித்த தகவலை இஸ்ரேலிய புலனாய்வு அமைப்பான மொசாட் முதலில் அறிந்து தெரிவித்ததாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**

அறுகம்குடாவில் கடந்த 24ஆம் திகதி தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக மொசாட் புலனாய்வு அமைப்பு கண்டறிந்து அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான எவ். பி. ஐக்கு தெரிவித்தது.

இதைத் தொடர்ந்தே அறுகம் குடாவுக்கு செல்ல வேண்டாம் என்று அமெரிக்கா பயண எச்சரிக்கை விடுத்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதலின் இலக்கு இஸ்ரேலிய பிரஜைகளே என்றும் இஸ்ரேல் அல்லாத நாடுகளில் இஸ்ரேலியர்களை இலக்கு வைத்துத் தாக்கும் நோக்கிலேயே அறுகம் குடா தெரிவு செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

அறுகம்குடா தவிர, இஸ்ரேல் பிரஜைகள் அதிகளவில் பயணிக்கும் எல்லே, வெலிகம பிரதேசங்களும் தாக்குதல் நடத்த இலக்கு வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இது தொடர்பான தகவலை கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர், மொசாட் அமைப்பு எவ். பி. ஐக்கு வழங்கியதாகவும் எவ். பி. ஐ. அதனை இலங்கை புலனாய்வு பிரிவுக்கு தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது.

(ஐ)

# பன்றி இறைச்சிக்கு தற்காலிகமாக தடை!

கொழும்பு, ஒக். 31

பன்றிகளை இறைச்சிக்காக கொல்வது, பன்றி இறைச்சியை விற்பனை செய்வது அல்லது வைத்திருப்பது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் இந்தத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியான வர்த்தமானியின்படி, ஆபிரிக்க பன்றி வைரஸ் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குள் பன்றிகள் அல்லது பன்றி இறைச்சி பொருட்களை கொண்டு செல்வது, பன்றிகளை கொல்வது, பன்றிகளை செயற்கையாக இனப்பெருக்கம் செய்தல், பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சி பொருட்களை விற்பனை செய்தல் அல்லது விநியோகித்தல் மற்றும் தொற்றுள்ள பாதிக்கப்பட்ட விலங்குகளின் சடலங்களை நீர்நிலைகளில் அல்லது வழிகளில் அப்புறப்படுத்துதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.

விலங்கு நோய்கள் சட்டத்தின் கீழ், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகம் திருமதி கே.ஏ.சி.எச் அபேரத்ன கொத்தலாவலவினால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

# யுவதிக்கு எமனானது கைபேசி!

கொழும்பு, ஒக். 31

புகையிரத பாதையின் அருகே நின்று கைபேசியில் உரையாடிய பெண் ரயில் மோதி உயிரிழந்தார்.

களுத்துறையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் 23 வயது பெண்ணே உயிரிழந்தார்.

அளுத்கமவிலிருந்து சென்ற அதிவேக ரயில் மோதியே பெண் உயிரிழந்தார்.

விபத்துக்கு ஏற்படும் முன்னதாக குறித்த பெண் புகையிரதப் பாதையின் அருகேநின்று கைபேசியில் பேசிக்கொண்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மது அருந்தியபோது தகராறு ஒருவர் அடித்துக் கொலை!

கொழும்பு, ஒக். 31

மது அருந்தியபோது ஏற்பட்ட தகராறில் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

அநுராதபுரம் - ஹித்தோகம பகுதியில் கடந்த 27ஆம் திகதி இந்தக் கொலை இடம்பெற்றது. கொலையானவர் அதே பகுதியை சேர்ந்த 58 வயது நபராவார்.

கொலையானவரும் கொலை செய்த நபரும் ஒன்றாக மது அருந்தியுள்ளனர். ஒரு கட்டத்தில் இருவருக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதன்போது, மது போத்தலால் ஒருவர் மற்றையவரின் தலையில் அடித்துள்ளார். இதில், அந்த நபர் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் 33 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# வீசா இன்றி தங்கியிருந்த 6 வெளிநாட்டவர் கைது!

கொழும்பு, ஒக். 31

நாட்டில் வீசா இன்றி தங்கியிருந்த 6 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா - சீதுவையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குடிவரவு - குடியகல்வு சட்டத்தை மீறி வெளிநாட்டவர்கள் குழு ஒன்று செயல்படுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கைதானவர்கள் 18, 23, 26, 39 மற்றும் 43 வயதுடைய பங்களாதேஷ் பிரஜைகள் என பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# வெள்ள நிவாரணமாக 30 இலட்சம் ரூபாய்!

## துறைமுக நகரம் வழங்கியது

கொழும்பு, ஒக். 31

அண்மையில் தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 30 இலட்சம் ரூபாயை கொழும்பு துறைமுக நகரம் (போர்ட் சிற்றி) வழங்கியுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் கொழும்பு துறைமுக நகர நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சியோங் ஹொங்பெங் ஆகியோர் நேற்றுமுன்தினம் சந்தித்தனர்.

இந்த சந்திப்பின்போது கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும், எதிர்கால பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதற்கான புதிய திட்டங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போதே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கில் 30 இலட்சம் ரூபாயை துறைமுக நகர நிறுவனத்தின் பணிப்பாளர் வழங்கினார்.

(ஐ)

# ஊவா, மத்திய மாகாணங்களின் பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை

கொழும்பு, ஒக். 31

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஊவா, மத்திய மாகாணங்களின் அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் நாளை வெள்ளிக்கிழமை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுமுறைக்கு பதிலாக எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை தீபாவளி பண்டிகை என்பதால் இன்றைய தினம் பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்குமாறு ஊவா, மத்திய மாகாணங்களின் ஆளுநர்களின் பணிப்புரைக்கு அமைவாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# தீபாவளி கொடுப்பனவு ரூ. 10 ஆயிரம் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 31

தீபாவளி பண்டிகைக்கு பெருந்தோட்ட கொம்பனிகள் வழங்கும் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் இந்தத் தொகை 10 ஆயிரம் ரூபாயே வழங்கப்பட்டது. இது இந்த முறை 20 ஆயிரம் ரூபாயாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர்களின் குறைந்த சம்பளத்தை கருத்தில் கொண்டு கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தோட்டங்கள் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# இந்திய - இலங்கை மீனவர் பிரச்னை; மனிதாபிமான அடிப்படையில் தீர்வு

## இரு நாடுகளின் அதிகாரிகளின் பேச்சில் முடிவு

கொழும்பு, ஒக். 31

இலங்கை - இந்திய கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்னைகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை அளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் தொடர்பான இந்தியா - இலங்கை கூட்டு செயல்குழுவின் 6ஆவது கூட்டம் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், இந்திய அரசாங்கத்தின் இந்திய மீன்வளத் துறையின் செயலர் அபிலக்சி லிகி தலைமையிலான இந்திய குழுவும், மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மேலும், இந்திய வெளி விவகார அமைச்சு, தமிழ்நாடு அரசு கடற்படை, கடலோர பொலிஸார், மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரக அதிகாரிகளும் இதில் பங்கேற்றனர்.

அத்துடன், இலங்கையின் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை வெளி விவகார அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம், கடற்படை, கரையோர காவல்படை மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது, கடற்றொழிலாளர் மற்றும் கடற்றொழில் துறை தொடர்பான அனைத்து பிரச்னைகள் குறித்தும் விரிவான மீளாய்வை மேற்கொள்ளப்பட்டதாக கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கைக் காவலில் உள்ள இந்திய கடற்றொழிலாளர்களும் அவர்களின் படகுகளையும் விரைவில் விடுவிக்குமாறு இலங்கை அரசை இந்தியத் தரப்பு இந்த சந்திப்பின்போது வலியுறுத்தியுள்ளது.

(ஐ)

# தீபாவளியை கொண்டாட வந்த இளைஞர்கள் நால்வர் கைது!

நுவரெலியா, ஒக். 31

தீபாவளியை கொண்டாடுவதற்கு போதைப் பொருட்களுடன் வந்த 4 இளைஞர்களை ஹற்றன் பொலிஸார் நேற்றைய தினம் கைது செய்தனர்.

ஹற்றன், டிக்கோயா, சாஞ்சிமலை பகுதிகளை சேர்ந்த நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைதான நால்வரும் கொழும்பில் தொழில்புரிந்தவர்கள். இவர்கள், தீபாவளி பண்டிகைக்காக தமது ஊருக்கு திரும்பியுள்ளனர். சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய அவர்களை சோதனையிட்டபோது அவர்களிடமிருந்து ஐஸ், கஞ்சா மற்றும் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் 22 முதல் 28 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் சங்கு சின்னத்துக்கே ஆதரவு!

## சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

"வடக்கு, கிழக்கு எங்கும் சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு பெருமளவான மக்கள் ஆதரவு கிடைத்துள்ளது", என்று அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் சாவகச்சேரியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோதே த. சித்தார்த்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வடக்கு, கிழக்கு எங்கும் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்ற ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு பெருமளவான மக்கள் ஆதரவு கிடைத்துள்ளது. இந்தத் தேர்தலிலே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வடக்கு, கிழக்கில் அதிகளவான ஆசனங்களை கைப்பற்றும்.

எனவே, அனைத்து மக்களும் தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையின் பால் நிற்கின்ற ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் - என்றார். (ஜ-05)





# ஜ. த. தே. கூட்டணியினர் சாவகச்சேரியில் பிரசாரம்

யாழ்ப்பாணம், ஒக். 31

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினர் நேற்றைய தினம் சாவகச்சேரியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டனர்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தன், பா. கஜதீபன் மற்றும் முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா. கிஷோர், முன்னாள் பிரதேசபை உபதவிசாளர் செ.மயூரன் உள்ளிட்டவர்கள் இந்தப் பரப்புரையில் பங்கேற்றனர். (ஜ-05)



# ஆறு. திருமுருகனுடன் முன்னணியினர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வளாகத்தில் அமைந்துள்ள நிர்வாக அலுவலகத்தில் குறித்த சந்திப்பு நடைபெற்றிருந்தது. (ஐ)

# மக்களுக்காக ஒன்றுபட முடியாதோர் எவ்வாறு தீர்வை பெற்றுத் தருவார்கள்?

## இப்படி கேட்கிறார் அங்கஜன்



யாழ்ப்பாணம், ஒக். 31

"மக்களுக்காக ஒன்றுபட இயலாதவர்கள் எப்படி மக்களுக்கான தீர்வை பெற்றுக் கொடுப்பார்கள்?" - இவ்வாறு ஜனநாயக தேசிய கூட்டணியின் முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

மேலும், "எமது மக்கள் அரசியல் ரீதியாகவும் தலைநிமிர்ந்து தன்மானத்துடன் நிற்க வேண்டும் என்றால் தமிழர்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமையே பலம் என அவர் அன்றே கணித்து தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பதில் அதிக கவனம் செலுத்தினார்.

ஆனால், இன்று எம் தமிழ் தலைமைகள் எமக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களை மறந்து தமது சுயலாபத்துக்காக ஆளுக்கொரு பக்கம் நீயா? நானா? எனப் பிரிந்து நிற்கின்றனர்.

தமிழ் மக்களுக்காக தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் என அனைவரும் நம்பியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பிளவடைய இடமின்றியுள்ள போதிலும் மேலும் பிளவடைவதற்கான வாய்ப்புகள் கண்ணூடாக தெரிகின்றன.

வீடாக இருந்த அந்த ஒற்றைச் சின்னம் இன்று சைக்கிள், மான், மாம்பழம், சங்கு என பிளவடைந்து மக்களுடைய எதிர்பார்ப்பிலும் மண் அள்ளிப் போட்டுள்ளது. மக்களுக்காக ஒன்றுபட இயலாதவர்கள் எப்படி மக்களுக்கான தீர்வை பெற்றுக் கொடுப்பார்கள்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ஐ-05)

# ஈ. பி. டி. பியை பலப்படுத்தனால் தமிழர் அபிலாசை நிறைவேறும்!

## டக்ளஸ் தேவானந்தா சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஒக். 31

ஈ. பி. டி. பியின் அரசியல் பலத்தை எவ்வளவு தூரம் தமிழ் மக்கள் அதிகரிக்கச் செய்கின்றார்களோ அதே வேகத்தில் தமிழ் மக்களின் அபிலாசைகளும் அதன் இலக்கை அடையும் - இவ்வாறு கூறியிருக்கிறார் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா.

வேலணையில் நடந்த தேர்தல் பிரசாரத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மாற்றம் என்பது ஒவ்வொருவரிடமிருந்தும் நம்பிக்கையுடன் உருவாக்கப்பட வேண்டும். அதுவே சமூக மாற்றத்துக்கும் தமிழ் மக்களின் அரசியல் மாற்றத்துக்கும் வழி வகுக்கும். அந்த நம்பிக்கையுடன் கூடிய அரசியல் மாற்றம் ஈ. பி. டி. பியை பலப்படுத்துவதாக இந்தமுறை பாராளுமன்றத் தேர்தல் அமையும்.

மேலும், சுமார் 30 வருடங்களாக என்னை நாடாளுமன்றம் அனுப்பிவரும் இந்த மாவட்ட மக்கள் கடந்த தேர்தலிலும் என்னை வெற்றிபெறச் செய்தார்கள். இது ஈ.பி.டி.பி கட்சிக்கு இதுவரை தமிழ் மக்கள் வழங்கிய அரசியல் அதிகாரங்களைக் கொண்டு முன்னெடுத்துவந்த சேவைகளுக்கு போதுமானதாக இருக்கவில்லை. ஆனாலும் மக்கள் எமக்கு வழங்கிய அந்த சிறிய அதிகாரத்தை கொண்டு முடியுமானவரை பல்வேறு சேவைகளை செய்து காட்டியிருக்கிறோம்.

எமது கட்சியின் கொள்கை வழிமுறையை ஏற்று அதனுடன் இணைந்து பயணிக்க தமிழ் மக்கள் அணிதிரள வேண்டியது அவசியமாகும். இந்த அணிதிரள்வு இந்த பாராளுமன்றத் தேர்தலில் பிரதிபலிக்கும் - என்றார்.




# தமிழ் மக்கள் கூட்டணியினர் திருநெல்வேலியில் பரப்புரை!

யாழ்ப்பாணம், ஒக். 31

தமிழ் மக்கள் கூட்டணியினர் திருநெல்வேலி பகுதிகளில் நேற்று புதன்கிழமை பிரசார பணிகளை மேற்கொண்டனர்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் மான் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் உள்ளிட்ட வேட்பாளர்கள் தமது ஆதரவாளர்களுடன் பிரசார பணிகளில் ஈடுபட்டனர்.

திருநெல்வேலி சந்தை பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை சந்தை வியாபாரிகள் உள்ளிட்ட பலர் தமது ஆதரவை தெரிவித்திருந்தனர் என்று தமிழ் மக்கள் கூட்டணியினர் தெரிவித்தனர். (ஐ)



# வீட்டு சின்னத்தை வீணடிக்க வேற்று சின்னங்கள் களத்தில்!

## தமிழ் அரசு கட்சி வேட்பாளர் சாடல்

காரைதீவு, ஒக். 31

வீட்டுச் சின்னத்தை வீணடிப்பதற்கு பல வேற்றுச் சின்னங்கள் தலைப்பட்டிருக்கின்றன. எத்தனை சின்னங்கள் வந்தாலும் வீடே வெல்லும் - இவ்வாறு அந்தக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் கி. ஜெயசிறில் தெரிவித்துள்ளார்.

நாவிதன்வெளியில் நடந்த பிரசார கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "எமக்காக நான், எனக்காக நான் இல்லை. இனத்துக்காகவே செயல்படுகின்றேன். எனது வெற்றி உங்களின் வெற்றி. அம்பாறை மாவட்டம் மறுமலர்ச்சி பெற வாக்களியுங்கள். உங்களைப் பாதுகாப்பது உங்களுடைய வாக்குப்பலமே. எங்களுடைய ஆயுதம் உங்களுடைய வாக்கு. கூடிய வாக்குகள் கிடைக்கப் பெறும்போது அம்பாறை மாவட்டத்துக்கு சவாலாகத் திகழ்கின்ற அனைத்து விடயங்களிலும் வெல்ல முடியும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்கள் சஜித் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்!

## டலஸ் அழகப்பெரும கூறுகிறார்



**கொழும்பு, ஒக். 31**

**வடக்கு மக்கள் சஜித் பிரேமதாஸமீது முழுமையான நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதற்கு கடந்த ஜனாதிபதித் தேர்தல் சான்றாகும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் நடந்த பிரசார கூட்டம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சூழ்நிலையில்தான் யாழ். மாவட்டத்தில் சஜித் பிரேமதாஸ முதலிடம் பிடித்தார். இந்த முடிவின் ஆழத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வரலாற்றில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய இனப்பிரச்னையை சந்தர்ப்பவாத அரசியலுக்கு சஜித் பயன்படுத்தமாட்டார் என்பது மக்களுக்குத் தெரியும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# வற் வரியும் நீக்கப்படவில்லை வரி சுமையும் குறையவில்லை!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 31

அநுரகுமார வழங்கிய வாக்குறுதியும் நிறைவேறவில்லை - வற் வரியும் நீக்கப்படவில்லை - வரிச்சுமையும் குறையவில்லை என்று கூறியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ.

தெமட்டகொடவில் நடந்த பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது எமது நாடு மிகவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது. ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் நாட்டு மக்களுக்குப் பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தார்.

வரிச்சுமை குறையும் என நாடு காத்திருந்தது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்கு பின்னர் வரி குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை. வற் உள்ளிட்ட நேரடி மற்றும் மறைமுக வரிகளைக் குறைக்க முடியாது போயுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளையும் அவரால் நிறைவேற்ற முடியாது போயுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த மீளாய்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின், வரிச் சுமை குறைக்கப்பட வேண்டுமாயின், கடந்த அரசாங்கம் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தைத் திருத்த வேண்டுமாயின், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்த வேண்டும் - என்றார். (ஐ)

# தேவை ஏற்பட்டாலே அரிசியை வாங்குமாறும் அரசு கோரலாம்!

## இப்படி சொல்கிறார் நாமல்

கொழும்பு, ஒக். 31

தேவை ஏற்பட்டால் மட்டும் அரிசி கொள்வனவு செய்யுமாறு இந்த அரசாங்கம் எதிர்காலத்தில் மக்களிடம் கோரிக்கை விடுக்கலாம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் கடவுச்சீட்டு பெற மக்கள் வரிசையில் காத்திருந்த போது அரசாங்கம்மீது நம்பிக்கையின்றி மக்கள் இவ்வாறு காத்திருப்பதாக தேசிய மக்கள் குற்றம் சுமத்தியிருந்தது.

தற்போது கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள பெரும் எண்ணிக்கையிலானவர்கள் வரிசையில் காத்திருப்பது இந்த அரசாங்கத்தின்மீது இளைஞர், யுவதிகளுக்கு நம்பிக்கையில்லாத காரணத்தினாலா?

இன்று அரசாங்கம் தேவை ஏற்பட்டால் மட்டும் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ளுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கிறது. எதிர்வரும் நாட்களில் தேவை ஏற்பட்டால் மட்டும் அரிசி மற்றும் தேங்காய் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கவும் கூடும் - என்றார்.

கொழும்பில் நிகழ்வு ஒன்றில் நேற்றுமுன்தினம் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே நாமல் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# ஐ. எம். எவ்வுடனான உடன்பாட்டில் அரசாங்கம் உறுதியாக இல்லை!

## சாடுகின்றது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, ஒக். 31

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்டுள்ள இணக்கப்பாட்டில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டில் இல்லை. இதனால், எமக்கு கடன் வழங்கிய எமில்டன் ரிசேவ் வங்கி எமக்கு எதிராக அமெரிக்காவில் மீண்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளது - என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவரும் புதிய ஜனநாயக கட்சியின் கம்பஹா மாவட்ட வேட்பாளருமான ருவன் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசாங்கம் நாணய நிதியத்துடன் நடத்திய கலந்துரையாடலில் சரியான தெளிவின்மையால் மூன்றாம் கட்ட நிதி உதவியும் அடுத்த வருடமே கிடைக்கும் சாத்தியம் என்றும் அவர் கூறினார்.

நாடு வங்குரோத்து அடைந்தபோது எமக்கு தனிப்பட்ட ரீதியில் கடன் வழங்கிய சர்வதேச நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடி சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட இணக்கப்பாட்டுக்கமைய கடன் மறுசீரமைப்புக்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது. இதன் பிரகாரம் கடன் மீள செலுத்துவதற்கு போதுமான காலம் வழங்கப்பட்டது. அந்த காலப் பகுதியில் கடன் வழங்குவதற்கு முடியுமான வகையில் எமது வருமானத்தை அதிகரித்துக் கொள்ளவும் எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

என்றாலும் ஜனாதிபதி தேர்தலில் அரசாங்கம் மாறியதுடன், தேசிய மக்கள் சக்தி கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் தொடர்பில் கடும் விமர்சனம் தெரிவித்து வந்ததுடன் அந்த நிபந்தனைகளில் திருத்தம் மேற்கொள்வதாகவும் தெரிவித்து வந்தது. இதனால், நாட்டுக்கு பெரும் பிரச்னைகள் ஏற்படும் - என்றார். (ஐ)

# அரச சேவையினரின் சம்பள உயர்வு சட்டபூர்வமாக மேற்கொள்ளப்பட்டதே

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 31

அரச சேவையாளர்களுக்கான வேதன அதிகரிப்புக்காகத் தாம் உரிய நடவடிக்கைகளை சட்டபூர்வமாக மேற்கொண்டிருந்தார் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரச பணியாளர்களுக்கு வேதனத்தை அதிகரிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிதி எதனையும் ஒதுக்கியிருக்கவில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரியவின் குற்றச்சாட்டு குறித்து பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரச சேவையாளர்களுக்கான வேதன அதிகரிப்பை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என தற்போதைய அரசாங்கம் முன்வைக்கும் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது.

நாம் அரசாங்கத்தைக் கையளிக்கும் போது மூன்று மாதங்களுக்கு தேவையான கொடுப்பனவை வழங்குவதற்கான கையிருப்பு காணப்பட்டது. கடந்த காலங்களில் நாம் முன்னெடுத்திருந்த திட்டமே தற்போதும் முன்னெடுக்கப்படுகிறது.

அமைச்சரவை தீர்மானங்களை மேற்கொண்டு அதனைச் செயல்படுத்துவதற்கு அரச அதிகாரிகளிடம் அனுமதி பெறப்பட வேண்டிய அவசியமில்லை. அரசமைப்புக்கு இணங்க, அமைச்சரவையே ஆட்சி செய்ய வேண்டும் - என்றும் ரணில் கூறினார்.

# அரச ஊழியரின் நம்பிக்கையை அநுர அரசாங்கம் இழந்துள்ளது!

## நிமல் லான்சா சொல்கிறார்

கொழும்பு, ஒக். 31

அரச ஊழியர்களின் சம்பளத்தை 6 மாதங்களுக்கு ஒருமுறை அதிகரிப்பதாகக் கூறிய ஜே. வி. பி. இன்று அதனை மறுக்கிறது. அரச ஊழியர்கள் திசைகாட்டி மீது மிகுந்த நம்பிக்கை வைத்து வாக்களித்தனர். அந்த நம்பிக்கையை அரசாங்கம் தற்போது இழந்துள்ளது - என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய மக்கள் கட்சியின் தலைவரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய முன்னர் ஜே. வி. பி.யுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள், ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டும், ஊதிய முரண்பாடுகளை களைய வேண்டும், சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று பெரியளவில் போராட்டம் நடத்தின.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாயால் உயர்த்திய போதிலும், குறித்த தொழிற்சங்கங்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தன. அவர்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர். ஆனால், இன்று என்ன நடந்துள்ளது?

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய அரச ஊழியரின் குறைந்தபட்ச ஊதியத்தை 55 ஆயிரமாகவும், 25,000 ரூபாய் சம்பள அதிகரிப்பையும் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. ஆனால் ஆட்சி மாற்றத்தால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது. ஆனால், 6 மாதங்களுக்கு ஒருமுறை அரசு ஊழியர்களின் சம்பளத்தை மேலும் உயர்த்துவோம் என்று தெரிவித்த ஜே. வி. பி. இன்று அதனை மறுக்கிறது - என்றார். (ஐ)

# தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி சரிந்துள்ளது

கொழும்பு, ஒக். 31

தேசிய மக்கள் சக்தியினரின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு மாத காலத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய எல்பிட்டி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளமை தென்படுகின்றது. எது எவ்வாறாக இருப்பினும் பொதுஜன பெரமுவின் வாக்கு வங்கியில் 10 வீதம் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

எந்த சந்தர்ப்பத்திலும் பொய்யான வாக்குறுதிகளை கண்டு ஏமாறமாட்டோம் என்ற ஆணையை வழங்கியுள்ள எல்பிட்டி மக்களுக்கு எம்முடைய நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகர சபைமீது மனித உரிமை மீறல் வழக்கு

## தண்ணீர் இணைப்புக்காக தோண்டிய வீதியை செப்பனிடாமைக்கு எதிராக!

கல்முனை, ஒக். 31

**கல்முனை மாநகர சபைக்கு எதிராக மனித உரிமை மீறல் மனுவை கல்முனை மேல் நீதிமன்றத்தில் தமது அமைப்பு தாக்கல் செய்துள்ளதாக இலங்கை நீதிக்கான மையத்தின் தலைவர் ஷஃபி எச். இஸ்மாயில் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கல்முனை மாநகர சபை எல்லைக்குள் புதிதாக தண்ணீர் வழங்கல் இணைப்புக்காக தோண்டப்படுகின்ற கொங்கிறீட் வீதிகள் இன்னும் செப்பனிடப்படவில்லை. இதனால், மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இதனை சுட்டிக்காட்டி எமது அமைப்பு மாநகர சபை ஆணையாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தது.

இதற்கு கல்முனை மாநகர சபை நிர்வாகம் பொறுப்பற்ற - கண்துடைப்பான பதிலை வழங்கியது. இந்தப் பதிலை ஏற்றுக்கொள்ளாமல் மாநகர சபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.


இந்த வழக்கில் மையத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி நியாத் ஏ.மஜீத், பிரதித் தலைவர் யூ.கே.எம்.றின்சான் ஆகியோரும் முன்னிலையாகியிருந்தனர்.

புதிதாக தண்ணீர் இணைப்பை பெறும் விண்ணப்பதாரர்கள், இந்தப் பணிக்காக வீதி தோண்டப்படுவதை சரி செய்வதற்கான கட்டணத்தை செலுத்திய பின்னரே தண்ணீர் இணைப்பு வழங்கப்படுகிறது. ஆனால், தண்ணீர் இணைப்பு வழங்கப்பட்ட பின்னரும் பல இடங்களில் வீதி செப்பனிடப்படவில்லை.

இது மாநகர சபை கட்டளை சட்டத்தை மீறும் செயல்பாடாகும். மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 46 மற்றும் 47 ஆவது பிரிவின்படி, வீதிகளை நிர்மாணிப்பதும் பராமரிப்பதும் மாநகர சபையின் அடிப்படைப் பொறுப்புகளாகும். இந்த அடிப்படை கடமைகளை நிறைவேற்றத் தவறுவது, மாநகர சபையின் சேவைத் தன்மையை கடுமையான கேள்விக்குட்படுத்துகிறது.

ஒரு குறிப்பிட்ட சேவையை வழங்கவென நிதி அறவிடப்பட்டு பின்னர் சேவையை வழங்காதிருப்பது ஒரு நிதி மோசடியாகும். மக்களிடம் அறவிடப்பட்ட நிதிக்கு என்ன நடந்துள்ளது? என சந்தேகம் எழுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த அடிப்படையிலேயே கல்முனை மாநகர சபைக்கு எதிராக மாகாண மேல் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான வழக்கு பதிவு செய்யப்படுவது இதுவே முதல் தடவை - என்றும் கூறினார். (ஐ)



# நாடகத்தில் கிழக்கில் முதலிடம் மாணவர்களுக்கு கௌரவிப்பு!

காரைதீவு, ஒக். 31

கிழக்கு மாகாணத்தில் முதலிடம் பெற்ற "சாதுரிய காக்கையார்" என்ற நாடகத்தில் நடித்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

கிழக்கு மாகாண நாடகப் போட்டியில் முதலிடம் பெற்ற இந்த நாடகத்தை அந்தக் கல்லூரியின் ஆசிரியர் சிவகுரு நந்தகுமார் தயாரித்திருந்தார்.

இந்த நாடகம் அண்மையில் கொழும்பு மருதானை ரவர் மண்டபத்தில் நடந்த தேசிய அளவிலான இறுதிப் போட்டியிலும் பங்கேற்றிருந்தது.

நாடகத்தை தயாரித்த ஆசிரியர், இதில் நடித்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ். இ. றெஜினோல்ட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் பங்கேற்றார். (ஐ)

# பொலிஸார் மீது தாக்குதல் பெண் உட்பட மூவர் கைது!

மட்டக்களப்பு, ஒக். 31

ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்தவரை கைது செய்ய முயன்ற போது பொலிஸாரை தாக்கினர் - அவர்களை கடமையை செய்யவிடாமல் தடுத்தனர் என்ற குற்றச்சாட்டுகளில் பெண் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏறாவூர் - மீராங்கேணியை சேர்ந்தவர்களே இவ்வாறு திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் விற்பனை செய்தவரின் வீட்டுக்கு சென்ற பொலிஸார் அங்கிருந்து 11.23 கிராம் ஹெரோயினை கைப்பற்றினர். இதையடுத்து அவரை கைது செய்ய முயன்றனர்.

இதன்போது, அங்கிருந்த 36 வயது பெண் ஒருவரும் 24 வயது ஆண் ஒருவரும் பொலிஸாரை தாக்கினர். இதையடுத்து, போதைப் பொருள் வியாபாரியுடன் அவர்களும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# அம்பாறை மாவட்ட மக்களுக்கு பொலிஸார் விசேட அறிவுறுத்தல்

கல்முனை, ஒக். 31

அம்பாறை மாவட்டத்தில் திருட்டு, கொள்ளை போன்ற சட்டவிரோத செயல்பாடுகள் அதிகரித்துள்ளன. எனவே, இது தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை, சவளக்கடை, காரைதீவு, சாய்ந்தமருது, பெரிய நீலாவணை உள்ளிட்ட பொலிஸ் பிரிவுகளிலேயே இந்தச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.


வீடுடைத்து திருடும் சம்பவங்கள் நள்ளிரவின் பின்னரும் அதிகாலை 4.30 மணிக்கு முன்னரும் அதிகளவில் இடம்பெறுகின்றன. வீட்டு உரிமையாளர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது யன்னல் கம்பிகளை வளைத்தும், ஓடுகளை பிரித்தும் திருடர்கள் கைவரிசை காட்டி வருகின்றனர். அதிக சத்தத்தை எழுப்பும் சுவரில் பொருத்தப்பட்ட மின்விசிறிகள் பயன்படுத்தப்படும் வீடுகளிலேயே திருடர்கள் அதிக கைவரிசை காட்டியுள்ளனர்.

தவிர, மோட்டார் சைக்கிள்கள் திருட்டும் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. பெரும்பாலும் பொது இடங்களில் நிறுத்தப்படும் மோட்டார் சைக்கிள்கள் களவாடப்படுகின்றன. இதேபோல், வயல் வேலையில் ஈடுபட்டவர்கள் வீதியோரமாக வாகனங்களில் வைத்துச் செல்லும் பொருட்களை திருடும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

சி. சி. ரீ. வி. கமெராவில் பிடிபடாமலிருக்கவும் பிறர் தம்மை அடையாளம் காணாமல் இருக்கவும் திருட்டில் ஈடுபடுபவர்கள் முகக்கவசம், தொப்பி அல்லது தலைக்கவசம் அணிந்தவாறு நடமாடுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, பகல் - இரவு வேளைகளில் இவ்வாறானவர்கள் நடமாடினால் அவதானமாக இருக்கவும். இவ்வாறான நபர்கள் தொடர்பில் சந்தேகம் இருந்தால் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் அளிக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ)

# மட்டக்களப்பில் இறந்து கரையொதுங்கும் மீன்கள்!

மட்டக்களப்பு, ஒக். 31



மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் ஒரு வகை மீனினம் பெருந்தொகையாக இறந்து கரையொதுங்கின.

களுதாவளை, தேற்றாத்தீவு, செட்டிபாளையம், மாங்காடு, குருக்கள்மடம் உள்ளிட்ட பல இடங்களிலும் இவ்வாறு மீன் கள் கரை ஒதுகுவதை அந்தப் பகுதி மீனவர்கள் நேரில் அவதானித் துள்ளனர்.

சிறிய அவளவிலான கறுப்பு நிற மீனினமே நேற்றுமுன்தினம் முதல் இவ்வாறு இறந்து கரையொதுங்கி வருகின்றன. சுமார் 15 வருடங்களுக்கு முன்னரும் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றதாகவும் கால நிலையால் கடலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இவை இறந்திருக்கலாம் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பலி!

மட்டக்களப்பு, ஒக். 31

வயலில் வரம்பு கட்டிக் கொண்டிருந்த கூலித் தொழிலாளி மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - கரடியனாறு - காயான்குடாவில் இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில், சத்துருகொண்டானை சேர்ந்த கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் (வயது 58) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் கரடியனாறு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வெல்லாவெளி பகுதியில் மாடுகள் களவு அதிகரிப்பு

மட்டக்களப்பு, ஒக். 31

மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் பல பகுதிகளில் மாடுகள் களவாடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று தெரிய வருகின்றது.

வெல்லாவெளி, தும்பங்கேணியில் கடந்த திங்கட்கிழமை இரவு பசு மாடும் அதன் கன்றும் களவாடப்பட்டு இறைச்சியாக்கியுள்ளனர்.

களவாடியவர்கள் கன்றை பற்றைக்காட்டுப் பகுதியில் வைத்து இறைச்சிக்காக வெட்டியதுடன், அதன் மிகுதி பாகங்களை அந்தப் பகுதியில் வீசி விட்டு சென்றுள்ளனர்.

இதேபோன்று, போரதீவுப்பற்று பகுதியில் தொடர்ச்சியாக மாடுகள் களவாடப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகின்றது.

இந்த மாடுகள் களவு தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் மூன்றில் ஒரு பங்கு மர இனங்கள் அழியும் நிலை!

**ஐ. நா. பல்லுயிர் மாநாட்டில் சுட்டிக்காட்டு**

காலி, ஒக். 31

**உலகளவில் 38 சதவீத மர இனங்கள் அழியும் அபாயத்தில் உள்ளன என்று அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.**


கொலம்பியாவின் காலி நகரில் நடந்த ஐ. நா. பல்லுயிர் மாநாட்டிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலக நாடுகள் பல பங்கேற்ற இந்த மாநாட்டில், இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச அமைப்பின் எச்சரிக்கை பட்டியலில் (சிவப்பு பட்டியல்) உலகில் 3இல் ஒரு பங்கு மரங்கள் அழியும் நிலையில் உள்ளன என சுற்றுச்சூழலுக்கான விஞ்ஞானிகள் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

விவசாயத்துக்காக காடுகளை அழித்தல் மற்றும் வர்த்தக பயன்பாட்டிற்காக மரங்களை வெட்டுதல் உள்ளிட்ட மனித நடவடிக்கைகள் மர இனங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துபவையாக உள்ளன. பூச்சிகள் மற்றும் நோய்கள் உள்ளிட்டவையும் மித அளவிலான தட்பவெப்பம் கொண்ட பகுதிகளில் மரங்களின் அழிவுக்கு வழிவகுக்கின்றன. இதனால், மரங்களை சார்ந்து வாழ கூடிய பிற இனங்களும் பெரிய அளவில் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றன. இவற்றில் பறவைகள், பாலூட்டிகள் மற்றும் பூச்சிகளும் அடங்கும்.

இந்த நெருக்கடிக்கு எதிராக, மர இனங்களை அழியும் நிலையில் இருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வெள்ளை மாளிகையில் தீபாவளி கொண்டாட்டம்



வாஷிங்டன், ஒக். 30


அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் தீபாவளி கொண்டாடப்பட்டது. இந்தக் கொண்டாட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் பங்கேற்றார்.

இந்து மக்களின் பண்டிகையான தீபாவளி இன்றைய தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தீபாவளி கொண்டாட்டம் நடைபெற்றது.

இதில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பங்கேற்றார். அத்துடன், அமெரிக்காவாழ் இந்தியர்கள் - இலங்கையர்கள், எம்.பிக்கள், அரசு அதிகாரிகள் உள்பட பல்வேறு தரப்பினர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ் அனுப்பி வைத்த தீபாவளி வாழ்த்து செய்தியும் ஒளிபரப்பப்பட்டது.



# உலகின் மாசுபட்ட நகரம் முதல் இடத்தில் லாகூர்!

நியூயோர்க், ஒக். 31

பாகிஸ்தானின் லாகூர் உலகின் மிகவும் மாசுபட்ட நகரங்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. லாகூரில் காற்றுத் தரக் குறியீடு ஆபத்தான நிலையாக 690 ஆக பதிவாகி உள்ளது.

இதையடுத்து, மக்களை பாதுகாப்பாக இருக்கும்படி சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மோசமான காற்றின் தரம் காரணமாக இருமல், வைரஸ் காய்ச்சல் மற்றும் தொண்டை புண் உள்ளிட்ட சுவாசப் பிரச்னைகளை மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

மக்கள் முகக்கவசம் மற்றும் கண்ணாடிகளை அணிய சுகாதார நிபுணர்கள் அறிவுறுத்தி உள்ளனர். தேவையின்றி வெளியே செல்ல வேண்டாம் எனவும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் நிபுணர்கள் பரிந்துரைத்துள்ளனர். (ஐ)

# புதிய தலைவராக காசிமை அறிவித்தது ஹிஸ்புல்லா!



பெய்ரூட், ஒக். 31

லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பின் புதிய தலைவராக நைம் காசிம் தெரிவாகியுள்ளார்.

ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரான ஹசன் நஸ்ரல்லா, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கடந்த செப்ரெம்பர் 27ஆம் திகதி கொல்லப்பட்டார். அவரை அடுத்து தலைவரான சின்வாரும் தலைவராகத் தெரிவாகவிருந்த ஹஷெம் சஃபீதினும் அடுத்த ஒரு வாரத்தில் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், ஹிஸ்புல்லாவின் புதிய தலைவராக நைம் காசிம் தெரிவாகியுள்ளார். இது தொடர்பாக ஹிஸ்புல்லா அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹிஸ்புல்லாவின் வழக்கமான நடைமுறைப்படி ஷூரா சபை கூடி நைம் காசிமை பொதுச் செயலாளராக தெரிவு செய்ததாக அறிவித்துள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பின் பொதுச் செயலாளராக இருந்த அப்பாஸ் அல்-முசாவி என்பவரால் 1991ஆம் ஆண்டு அமைப்பின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டவர் நைம் காசிம். இஸ்ரேலின் ஹெலிகொப்டர் தாக்குதலில் அப்பாஸ் அல்-முசாவி கொல்லப்பட்டார். ஹசன் நஸ்ரல்லா பொதுச் செயலாளர் ஆனபோதும், துணைத் தலைவராக நைம் காசிம் தொடர்ந்தார். ஹிஸ்புல்லாவின் முன்னணி செய்தித் தொடர்பாளர்களில் ஒருவராகவும் அவர் நீண்ட காலமாக இருந்துள்ளார்.

# படகு கவிழ்ந்ததில் 12 அகதிகள் பலி!

கெய்ரோ, ஒக். 31

எகிப்திலிருந்து சட்டவிரோதமாக ஐரோப்பாவுக்கு படகில் சென்ற 12 பேர் படகு கவிழ்ந்து உயிரிழந்தனர்.

மத்திய தரைக்கடலில் லிபியாவிலிருந்து 60 கிலோமீற்றர் தொலைவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

படகில் 13 பேர் பயணித்திருந்த நிலையில் ஒருவர் மட்டுமே உயிரிருடன் காப்பாற்றப்பட்டுள்ளார். (ஐ)

# காசாவில் தாக்குதல் 143 பேர் உயிரிழப்பு!

**பலரை காணவில்லை**



காசா, ஒக். 31

வடக்கு காசாவின் பெய்ட் லஹியா நகரத்தில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த ஐந்து மாடிக் கட்டடம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில்143 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் முதியவர்களும் அடங்குவர் என்று காசா சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி பலர் காணாமல் போயுள்ளனர். இதனால், இறப்பு மற்றும் காயம் மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்த ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் ஆயிரத்து 139 பேர் கொல்லப்பட்டனர். 254 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து ஹமாஸ் அமைப்பை அழிக்கும் நோக்கில் காசா மீது இஸ்ரேல் படையெடுத்தது.

இஸ்ரேலின் படையெடுப்பால் இதுவரை 43 ஆயிரத்து 61 பேர் கொல்லப்பட்டனர். ஒரு இலட்சத்து ஆயிரத்து 223 பேர் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 'பெல்ட் அன்ட் றோட்' திட்டத்தில் இணைவதற்கு பிரேசில் மறுப்பு

பிரேசிலியா, ஒக். 31


சீனாவின் "பெல்ட் அன்ட் றோட்" (பி. ஆர். ஐ.) திட்டத்தில் இணைய பிரேசில் மறுப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பிரேசில் ஜனாதிபதி லுலா த சில்வாவின் வெளிவிவகார கொள்கை ஆலோசகர் செல்சோ அமோரிம் கூறினார் என்று பிரேசிலின் "ஓ குலோபோ" நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில், 'ஜனாதிபதி லுலா த சில்வா தலைமையிலான பிரேசில், பி. ஆர். ஐ. திட்டத்தில் சேராது. அதற்கு பதிலாக சீன முதலீட்டாளர்களுடன் ஒத்துழைக்க மாற்று வழிகளை பிரேசில் தேடும்.

பி. ஆர். ஐ. ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல், சீனாவுடனான உறவை ஒரு புதிய நிலைக்கு கொண்டு செல்ல பிரேசில் விரும்புகிறது. சீனர்கள் இதை "பெல்ட் அன்ட் றோட்" என்று அழைக்கிறார்கள். அவர்கள் விரும்பும் பெயர்களை அவர்கள் கொடுக்கலாம். ஆனால், பிரேசிலுக்கு என்று முன்னுரிமை திட்டங்கள் உள்ளன. அவை சீனாவால் ஏற்றுக்கொள்ளப்படலாம் அல்லது ஏற்றுக் கொள்ளப்படாமல் போகலாம்" என்றுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 20ஆம் திகதி சீன ஜனாதிபதி பிரேசில் செல்லவுள்ளார். பெல்ட் அண்ட் ரோடு திட்டத்தில் பிரேசிலை இணைக்கச் செய்வதே இந்தப் பயணத்தின் முக்கிய நோக்கம் என்று கருதப்படும் நிலையில் பிரேசில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மந்தனா அபார சதம் தொடர் இந்தியா வசம்!

அகமதாபாத், ஒக். 31

ஸ்மிருதி மந்தனாவின் அபார சதத்தின் மூலம் நியூசிலாந்து மகளிர் அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரை இந்திய மகளிர் அணி கைப்பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி அகமதாபாத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 49.5 ஓவர்களில் 232 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக புரூக் ஹாலிடே 96 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 9 பௌண்ட்ரிகளுடன் 86 ஓட்டங்கள் விளாசினார். ஜார்ஜியா பிலிமெர் 39, இஸபெல்லா காஸி 25 ஓட்டங்கள் சேர்த்தனர்.

233 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 44.2 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 236 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

தொடக்க வீராங்கனையான ஸ்மிருதி மந்தனா 122 பந்துகளில், 10 பௌண்ட்ரிகளுடன் 100 ஓட்டங்கள் விளாசினார். அணித் தலைவி ஹர்மன்பிரீத் கவுர் 63 பந்துகளில் 6 பௌண்ட்ரிகளுடன் 59 ஓட்டங்கள் சேர்த்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரை 2-1 என கைப்பற்றி கிண்ணத்தையும் வென்றது. (ஐ)

# பெங்களூரு அணியின் தலைவராக கோலி?

மும்பை, ஒக். 31


றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் தலைவராக மீண்டும் விராட் கோலி நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகின்றது.

18ஆவது ஐ. பி. எல். தொடர் 2025 மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான மெகா ஏலம் எதிர்வரும் நவம்பர் இறுதியில் நடைபெறவுள்ளது.

இந்த ஏலத்துக்கு முன்பதாக விளையாடும் 10 அணிகளும் 6 வீரர்கள் வரை தக்கவைக்க முடியும். தக்கவைக்கப்படும் வீரர்கள் அறிவிப்பு இன்றே கடைசி நாளாகும்.

இந்தநிலையில், பெங்களூரு அணியில் விராட் கோலி தக்க வைக்கப்பட்டுள்ளார் என்று அறிவிப்பு வெளியாகி உள்ளது. மேலும், அவரே பெங்களூரு அணியின் கேப்டனாக தேர்வு செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஐபிஎல் 2021இல் பெங்களூரு அணியின் தலைமை பதவியிலிருந்து கோலி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இந்திய அணியை வீழ்த்தி எனது வாழ்வை நிரப்புவேன்!


## பட் கம்மின்ஸ் உறுதி

சிட்னி, ஒக். 31

இந்தியாவுக்கு எதிராக ஒரு டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என்பதே எனது கிரிக்கெட் வாழ்வில் நிரப்ப வேண்டிய மிகப்பெரிய விடயம் என்று கூறியுள்ளார் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ்.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவுக்கு சென்று 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட போர்டர் - கவாஸ்கர் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர் நவம்பர் 22ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதையொட்டியே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், "நியூசிலாந்துக்கு எதிராக இந்தியா சந்தித்துள்ள தோல்வி அவுஸ்திரேலியாவின் வெற்றிக்கு ஊக்கமாக இருக்கும் என்று நம்புகிறேன். எப்போதுமே நீங்கள் எதிர்கொள்ளும் எதிரணி அழுத்தத்தின் கீழ் இருப்பது மோசமான விடயமல்ல. ஆனால், அவர்கள் இதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் நன்றாக விளையாடி வென்றுள்ளார்கள். எனவே, அவர்களை அமைதியாக வைத்திருக்க முயற்சிப்பதே எங்களுடைய வேலை. இந்தியாவுக்கு எதிராக ஒரு டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என்பதே எனது கிரிக்கெட் வாழ்வில் நிரப்ப வேண்டிய மிகப் பெரிய விசயமாகும். குறிப்பாக சொந்த மண்ணில் அவர்களுக்கு எதிராக வெல்ல விரும்புகிறோம்", என்றார்.



# 'பொக்ஸிங் டே' டெஸ்டில் ஆடுகிறது சிம்பாவே அணி!


ஹராரே, ஒக். 31

28 வருடங்களுக்கு பின்னர் சிம்பாவே அணி நத்தார் பண்டிகைக்கு மறுநாளான - பொக்ஸிங் டே டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணி எதிர்வரும் டிசெம்பர் மாதம் சிம்பாவேக்கு சென்று 3 இருபது - 20, 3 ஒருநாள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது.

இருபது - 20 தொடர் டிசெம்பர் 9, 11, 12ஆம் திகதிகளிலும் ஒருநாள் போட்டிகள் டிசெம்பர் 15, 17, 19ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

டெஸ்ட் தொடர் பொக்ஸிங் டே எனப்படும் டிசெம்பர் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. முன்னதாக, 1996ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக பொக்ஸிங் டே கிரிக்கெட்டில் விளையாடிய சிம்பாவே 28 வருடங்களின் பின்னர், பொக்ஸிங் டே கிரிக்கெட்டில் விளையாடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





# அதிக சதங்கள் அடித்த நாயகியானார் மந்தனா!

அகமதாபாத், ஒக். 31

இந்திய மகளிர் அணிக்காக அதிக சதங்கள் அடித்த வீராங்கனை என்ற சாதனையை ஸ்மிருதி மந்தனா படைத்துள்ளார்.

நியூசிலாந்து மகளிர் அணிக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் ஸ்மிருதி மந்தனா சதம் விளாசினார். இது அவரின் 8ஆவது சதமாகும். இதன் மூலம் இந்திய அணிக்காக அதிக சதங்கள் விளாசிய மிதாலி ராஜின் சாதனையை மந்தனா முறியடித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் மந்தனா 8 சதங்களுடன் முதல் இடத்திலும் மிதாலி ராஜ் 7 சதங்களுடன் 2ஆவது இடத்திலும் கவுர் 6 சதங்களுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

மிதாலி ராஜ் 211 போட்டிகளில் 7 சதங்கள் அடித்துள்ளார். மந்தனா 88 போட்டிகளில் 8 சதங்கள் விளாசியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இங்கிலாந்துடனான தொடர் மே. இ. தீவுகள் அணி அறிவிப்பு!

டிரினிடாட், ஒக். 31

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் மோதும் ஒருநாள் போட்டி தொடர் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சென்றுள்ள இங்கிலாந்து அணி 3 ஒருநாள், 5 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது.

இங்கிலாந்துக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் ஒருநாள் போட்டிக்கு அணித் தலைவராக ஷாய் ஹோப் நியமிக்கப்பட்டுள்ளார்.

அணி விவரம்:

ஷாய் ஹோப் (அணித் தலைவர்), ஜூவல் அண்ட்ரூ, கீசி கார்டி, ரோஸ்டன் சேஸ், மத்தியூ போர்ட், ஷிம்ரன் ஹெட்மையர், அல்ஷாரி ஜோசப், ஷர் ஜோசப், பிரண்டன் கிங், எவின் லூயிஸ், குடகேஷ் மோடி, ஷெர்பேன் ரதர்போர்ட், ஜெய்டன் சீல்ஸ், ரொமரியோ ஷெப்பர்ட், ஹெய்டன் வால்ஷ் ஜூனியர். (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சுனாவுக்கு...

விசாரணைக்கு நீதிமன்றில் எடுக்கப்பட்டது. இதன்போது, மருத்துவர் அர்ச் சுனா மன்றில் முன்னிலையாகியிருக்க வில்லை.

மருத்துவர் அர்ச்சுனா மன அழுத்தம் மற்றும் தேர்தல் பரப்புரையில் தீவிரமாக உள்ளார் என்று அவரின் சட்டத்தரணிகள் மன்றுக்குத் தெரிவித்தனர்.

எனினும், மருத்துவர் அர்ச்சுனா தொடர்ந்து சமூக ஊடகங்களில் செயல்படுவதையும் நேற்றைய தினமும் பதிவிட்டிருப்பதை எதிர் தரப்பு சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதையடுத்து, மருத்துவர் அர்ச்சுனாவை கைது செய்து முற்படுத்த மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## புதிய புரட்சிக்கு...

கொண்டாடுவோம் - என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வெளியிட்ட தீபாவளி வாழ்த்து செய்தி யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இருள் நீங்கி ஒளிமயமாவதை அடையாளப்படுத்தும் முகமாக உலக வாழ் இந்து பக்தர்களால் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. சுதந்திரத்துக்குப் பின்னர் இருளிலிருந்து வெளிச்சத்தைத் தேடிவந்த இலங்கை மக்கள் தற்போது புதிய எதிர்பார்ப்புகளை சுமந்து கொண்டிருக்கின்றனர். இது மக்களின் பல வருட எதிர்பார்ப்பாகும்.

இத்தனை நாட்களாக இலங்கையை ஆட்சி செய்தவர்களால் முடக்கி வைக்கப்பட்டிருந்த பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை மலரச் செய்யும் மாற்றத்துக்கான யுகத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். தீபாவளி கொண்டாட்டத்துக்கு பல காரணங்கள் உள்ளன. 14 வருட வனவாசத்தின் பின்னர் இராமர், இலட்சுமணர், சீதா பிராட்டி மீண்டும் அயோத்திக்கு வருகை தந்தமை மற்றும் கிருஷ்ண பகவான் நரகாசுரனை அழித்தமையை நினைவுகூரும் விதமாக இந்த பண்டிகை கொண்டாடப்படுகிறது.

அஞ்ஞானத்தின் இருளை போக்க மெய்ஞானத்தின் ஒளியால் மட்டுமே முடியும் என்ற தொனியில் தீபங்களை ஏற்றி இலங்கையர்களாக புதிய புரட்சிக்கு வழிவகுப்பதாக இம்முறை தீபாவளி பண்டிகையை கொண்டாடுவோம் என மக்களிடம் கேட்டுகொள்கிறேன்.

கலாசார பல்வகைத்தன்மையின் அழகை மெருகூட்டும் வகையில், ஒருவருக்கொருவர் கௌரவம், ஏற்றுக் கொள்ளல் மற்றும் சகோதரத்துவம் என்பவற்றுக்காக கரங்களை நீட்டுவோம். பிரித்து வலுவிழக்கச் செய்யப்பட்ட இலங்கை தேசத்தை பிளவுபடாமல் வலுவாக முன்னோக்கிக் கொண்டுச் செல்ல வேண்டிய காலம் உதயமாகியுள்ளது. அநீதி, வேறுபாடுகள், பிளவுபடுத்தல், வெறுப்பு பேச்சுகள், வன்முறைகள் என்பதை முழுமையாகத் துடைத்தெறிந்து சமூகத்தில் வரப்பிரசாதங்களை பெற்றுக்கொள்வோர் மற்றும் வரப்பிரசாதங்கள் கிடைக்காதவர்கள் என்ற வேறுபாடுகளை முழுமையாக இல்லாது செய்ய முன்வருவோம்.

அவ்வறான, இரக்கம் கொண்ட ஒரு புதிய கலாசார இருப்பை உருவாக்க முன்வருமாறு அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன். இந்தத் தீபாவளியில், வளமான நாடு மற்றும் அழகான வாழ்க்கை என்ற நமது எதிர்பார்ப்பு நனவாக வேண்டுமானால், அதற்கான கலாசார, அரசியல் ரீதியான மனப்பாங்கு மாற்றமும் அவசியமாகும்.

தீபாவளி தினத்தில் அனைத்து வீடுகளிலும் நகரங்களிலும் ஏற்றப்படும் ஆயிரக்கணக்கிலான விளக்கு ஒளிகள் அனைவரினதும் மனங்களில் நட்புறவு மற்றும் ஞானத்தின் ஒளியை பரவச் செய்வதாக அமையட்டும் என பிரார்த்திப்பதோடு இலங்கைவாழ் இந்து பக்தர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துகளை தெரிவிக்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

## மின்கட்டணம்...

குறிப்பிட்டுள்ளார்.

“மின்சக்தி மற்றும் வலுசக்தி துறைகள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில் வலுசக்தி சுயாதிகாரத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும். புதிய மின்சார சட் டத்தை தயாரிக்கும் போது, வலுசக்தி சுயாதிகாரத்தை கட்டியெழுப் புவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

“செயல்திறனின்மை மற்றும் ஊழியர்கள் முகாமைத்துவம் தொடர்பிலான தீர்மானங்களை எடுக்கவுள்ளேன். செயல்திறன் மிகுந்த பொதுச் சேவையை முன்னெடுப்பதற்கு மின்சார சபைக்கு தேவையான மாற்றங்களை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க உறுதியளித்துள்ளேன். அடுத்த சில வருடங்களில் மின்சார கட்டணத்தை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்க எதிர்பார்த்துள்ளேன்”, என்றும் ஜனாதிபதி இந்த சந்திப்பில் தெரிவித்தார் என்று அவரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ஐ)

## சின்னம்மை...

தடுப்பூசிகளை பெறாத, ஒரு தடுப்பூசி மாத்திரம் பெற்ற தடுப்பூசி வழங்கப்பட்டமைக்கான உரிய சான்றுகளற்ற அனைவருக்கும் இந்தத் தடுப்பூசி வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட12 மாவட்டங்களில் 206 மருத்துவ அதிகாரி பிரிவுகளில் இந்தத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

9 மாதங்களுக்கு மேற்பட்ட, 19 வயதுக்கு உட்பட்ட தடுப்பூசி பெறாதவர்களுக்கும் சின்னம்மை தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## 1000ஐ...

முகாமைத்துவ நிலையத்துக்கு 297 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகா மைத்துவ நிலையத்துக்கு 714 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறைகள் தொடர்பில் 10 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 21 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஜீ.சீ.ஈ...

மாத்திரம் பதிவிறக்கம் செய்யுமாறும் அவர் மாணவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சை நடைபெறும் திகதி கடந்த மார்ச் மாதம் தீர்மானிக்கப்பட்டது. சமூக வலைத்தளங்கள் ஊடாகப் பல தவறான விளம்பரங்கள் நடக்கின்றன என்று தோன்றுகிறது. உயர்தர பரீட்சை நடைபெறும் திகதி தொடர்பில் மாணவர்கள் மத்தியில் நிச்சயமற்ற தன்மை காணப்பட்ட நிலையில் அதனை சரி செய்வதற்காகவே இந்த செய்தியாளர் சந்திப்பு நடைபெறுகிறது என்றும் அவர் கூறினார்.

மேலும், பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்புகளை மாத்திரம் எப்போதும் நம்புங்கள். சமூக வலைத்தளங்கள் ஊடாக வெளியிடப்படும் விளம்பரங்களை பார்த்து ஏமாற வேண்டாம். உயர்தர பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மிக விரைவில் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும்.

இதனிடையே, பல மாணவர்களிடமிருந்து பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு கோரிக்கைகள் வந்துள்ளன. கடந்த காலங்களில் நாடு எதிர்கொண்ட பல்வேறு நெருக்கடிகள் காரணமாக மிகவும் ஒழுங்கற்ற முறையில் பரீட்சைகளை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டின் இறுதியில் பரீட்சைகளை முன்னர் போன்று அதே கால ஒழுங்கில் நடத்த முடியும் - என்றார். (ஐ)

# பிரதமரின் தீபாவளி வாழ்த்துச் செய்தி

கொழும்பு, ஒக். 31

தீபாவளியின் ஒளி நம் இல்லங்களை ஒளிரச் செய்வது மட்டுமல்லாமல், நீதி, கருணை மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் ஆழமான உணர்வை நம் இதயங்களில் ஒளிர வைக்கட்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது தீபாவளி வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

அனைவரும் சுதந்திரம், கண்ணியம் மற்றும் உரித்தை அனுபவிக்கக் கூடிய ஓர் உலகைக் கட்டியெழுப்ப நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## தமிழ்மக்களை...

அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 8 முக்கிய அம்சங்களை அந்தக் கூட்டணி முன்வைத்துள்ளது.

அவற்றில், தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால் தான் இலங்கைத்தீவின் பல்லினத்தன்மையை உறுதிப்படுத்தலாம். எனவே புதிய யாப்பானது இலங்கைத்தீவின் பன்மைத் தேசியப் பண்பை உறுதிப்படுத்தும் விதத்தில், அதாவது புதிய யாப்பானது இலங்கைத்தீவு ஒரு பன்மைத் தேசிய அரசாகக் கட்டமைக்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அலகானது ஒன்றிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்களை ஒன்றிணைந்ததாக அமைய வேண்டும். குறித்த சுயநிர்ணய அலகுக்குள் வாழும் முஸ்லிம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு பேச்சு நடத்த ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி எப்போதும் தயாராக உள்ளது.

மலையகத் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படவேண்டும். மேலும் உடனடி பிரச்னைகளுக்கும் அவர்கள் தொடர்ச்சியாக முன்வைத்துவரும் கோரிக்கைகளுக்கும் தீர்வுகள் வழங்கப்படவேண்டும். இத்தீர்வுகளுக்கான போராட்டத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியானது மலையகத் தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கும்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு நடத்திய இன அழிப்பு, போர் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக்கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு, பரிகார நீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகளின் மீள்நிகழாமையை உறுதி செய்யவேண்டும். இதுவரையிலுமான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் தொகுக்கப்பட்ட அனுபவமாக, ஐ. நா. பொதுச்செயலரின் பொறுப்புகூறலை ஐ. நா. பொதுச் சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இன அழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும்.

அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நிலப்பறிப்பைத் தடுக்கவும், நமது வளங்கள் இனஅழிப்பின் ஒருபகுதியாகச் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் தமிழர் தாயகத்தின் தேசிய வளங்களை இயற்கையின் சமநிலை குலையாத வகையில் வினைத்திறனுடன் பயன்படுத்தவல்ல தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்புக்களை நாம் உருவாக்கவேண்டும். இதற்கேற்ற வகையில் தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு, புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

எமது நாட்டின் கடல் வளங்கள் அழிக்கப்படுவதை தடுப்பதற்கும், கடற்றொழிலாளர்கள் சமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்குமான வகையில், 2016ஆம் ஆண்டில் இலங்கை இந்திய அரசுகள் மேற்கொண்ட கூட்டு இணக்கத்தின் அடிப்படையில் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்தல், 1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கமற்றும் 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சட்டங்களை உறுதியான முறையில் நடைமுறைப்படுத்துதல், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலுவாக்குதல், மீனவக் கிராமங்களிலிருந்து படைத்தரப்பினர் வெளியேறுதல போன்ற நடவடிக்கைகள் மூலம் அம்மக்களின் பாதுகாப்பும் வாழ்வாதாரங்களும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

ஒரு நிரந்தர தீர்வை கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்தோடும் - தமிழர்களின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையின்கீழ் விசேட இடைக்காலப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று உருவாக்கப்படவேண்டும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர்களான எம். கே. சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், சி. வேந்தன், சசிகலா ரவிராஜ், சுரேஸ் பிரேமச்சந்திரன், குருசுவாமி சுரேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## புதிய...

பின்னரே முடிவு செய்யப்படும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் கூறியிருந்தார். இது தொடர்பில் கஜேந்திரகுமாரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தேசிய மக்கள் சக்தியினரின் ஆழமான இனவாதப்போக்கை உணர்ந்துதான் தமிழ்மக்கள் அவர்களை தொடர்ச்சியாக நிராகரித்து வந்துள்ளனர். அதுமாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் தற்போதைய நிலைப்பாடு தெற்கில் வாழும் சிங்கள மக்களை கண்திறக்கச்செய்யும் வகையில் அமைந்துள்ளது - என்றும் சொன்னார். (ஐ)

## கொங்கிறீட்

ஒப்பந்த அடிப்படையில் சலவை தொழிலில் ஈடுபட்டு வரும் மாணிக்கம் சுப்பிரமணியம் (வயது 54), அவரின் மனைவியான சுப்பிரமணியம் மேரி ரீட்டா (வயது 53) ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டனர்.

உயிரிழந்த இருவரும் இரு பிள்ளைகளின் பெற்றோராவார். கொலையானவருடன் வேலைக்கு செல்லும் பெண் நேற்றுக் காலை அவரை கைபேசியில் அழைத்துள்ளார். அதற்கு அவர் பதிலளிக்கவில்லை. இதனால், சந்தேகமடைந்த அவர், அவரின் வீட்டுக்கு சென்று பார்த்த போது தம்பதியர் இருவரும் இரத்த வெள்ளத்தில் சடலங்களாக கிடந்தனர்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் விசாரணையை நடத்தினர்.

பருத்தித்துறை நீதிவான் பொ. கிருசாந்தன் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்ட பின்னர், சடலங்கள் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

கொலைக்கான காரணம் தெரிய வரவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சட்டம் துஷ்பிரயோகம்; ஜனாதிபதிக்கு மகஜர்!

## உதய கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 31

சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வது தொடர்பில் பொதுமக்களின் அதிருப்தியை ஜனாதிபதிக்கு தெரிவிப்பதற்காக கையெழுத்து மனு ஒன்றை அவருக்கு வழங்கவுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஆய்வு அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோர் பதவியில் இருந்து நீக்கப்படாமல் முதல் மாதத்திலேயே அரசாங்கம் சட்டத்தை தவறாக பயன்படுத்தியதாகவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பிணையில் விடுவிக்கப்பட்டார்

கொழும்பு, ஒக். 31

**முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.**

சமீபத்தில் ஹில்டன் ஹோட்டலில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட பி. எம். டபிள்யூ. சொகுசு கார் தொடர்பான விசாரணைகளுக்கு அமைவாக அவர் கடந்த 23ஆம் திகதி குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அவரை நேற்று வரை விளக்கமறியலில் கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதற்கமைய, நேற்றைய தினம் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன்போது, அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# போதைப் பொருட்களுடன் அரியாலையில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 31

ஹெரோயின் மற்றும் போதை மாத்திரைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - அரியாலையில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூட்ஸன் சூரிய பண்டாரவின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது முன்னெடுக்கப்பட்டது.

அரியாலையை சேர்ந்த, 26 மற்றும் 32 வயது நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். ஒருவரிடமிருந்து 10 போதை மாத்திரைகளும் மற்றையவரிடமிருந்து 120 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டன.

மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிரான மனு நிராகரிப்பு

கொழும்பு, ஒக். 31

ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க தேர்தலில் போட்டியிடுவதைத் தடை செய்யுமாறு கோரி தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை நிராகரித்தது.

கம்பஹா மாவட்டத்தின் சுயேச்சை குழு வேட்பாளரான கே.எம். மஹிந்த சேனாநாயக்க ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு பிரீதி பத்மன் சூரசேன, குமுதுனி விக்கிரமசிங்க, அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் ஆயத்தால் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. (ஐ)

# காதலன் கடலில் தள்ளியதில் பாறையில் மோதி காதலி பலி!

கொழும்பு, ஒக். 31

காதலனால் கடலில் தள்ளிவிடப்பட்ட காதலி பாறையில் மோதுண்டு உயிரிழந்தார்.

இந்த சம்பவம் களுத்துறை பயாகலையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. இதில், 19 வயது யுவதியே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் அறிய வருவதாவது,

பயாகலை - தியலகொடை கடற்கரைக்கு காதலர்கள் இருவரும் சென்றுள்ளனர். இந்த நிலையில் இருவருக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

ஒரு கட்டத்தில் கோபமடைந்த காதலன் தனது காதலியை கடலில் தள்ளிவிட்டுள்ளார். கடலிலிருந்த பாறைகளில் விழுந்த அவரின் காதலி தலையில் படுகாயமடைந்தார். அவர் மீட்கப்பட்ட நிலை யில் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தையடுத்து சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# சொந்தக் கட்சியினரே பிரச்னை தருகிறார்கள்

## ஹிருணிகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 31

எனது சொந்த முகாமில் உள்ள சில உறுப்பினர்கள் எனக்கு பிரச்னைகளை உருவாக்குகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட ஹிருணிகா பிரேமச்சந்திர கூறியுள்ளார்.

"எமது கட்சியில் இணைந்த எனது சொந்த அரசியல் முகாமைச் சேர்ந்த சிலர் எனக்கு பிரச்னைகளை உருவாக்கி என் மீது சேற்றை வாரி வீசுகின்றனர்.

இந்த நபர்களை பற்றி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிந்திருக்கிறார். விரைவில் கட்சியை சரியான பாதையில் கொண்டு செல்வார். எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி மறுசீரமைக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ)

# பாதாள உலகக் குழுவை சேர்ந்தவருக்கு மறியல்!

கொழும்பு, ஒக். 31

பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 'பியுமா' என்று அழைக்கப்படும் பியூமி ஹஸ்திக என்பவரை எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பாதாள உலக கும்பலை சேர்ந்த 'பியுமா' டுபாயில் வைத்து கைது செய்யப்பட்டு கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி இலங்கைக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, இவரைத் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை நடத்த குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இவர் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரும் பாதாள உலக கும்பலின் தலைவருமான 'குடு சலிந்து' என்று அழைக்கப்படும் சலிந்து மல்ஷிக என்பவரின் முக்கிய உதவியாளராவார்.

மேலும், இவர் பல்வேறு போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலக கும்பலின் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ)

# காதலியை கத்தியால் குத்திய காதலன் கைது!

கொழும்பு, ஒக். 31

காதலியை கத்தியால் குத்திக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் காதலன் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை அநுராதபுரம் நகரத்தில் கும்பிச்சங்குளம் வாவிக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைதானவர் அநுராதரபுத்தை சேர்ந்த 30 வயது நபராவார். அதே பிரதேசத்தில் வசிக்கும் 25 வயது பெண்ணே இதில் காயமடைந்தார்.

சந்தேக நபரான காதலன் தனது காதலியை கொலை செய்துவிட்டு தனது உயிரை மாய்த்துக் கொள்ளத் திட்டமிட்டிருந்தார் என்று கூறப்படுகின்றது.

காதலனை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரின் காதலி அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# இரு சிறுமிகள் துஷ்பிரயோகம் கணித பாட ஆசிரியர் கைது!

கொழும்பு, ஒக். 31

கணித பாடம் கற்க வருமாறு அழைத்து இரு மாணவியரை துஷ்பிரயோகம் செய்த ஆசிரியர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பணியகத்திற்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

ஹொரணையில் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் கணித பாட ஆசிரியரே கைது செய்யப்பட்டுள்ளார். இவரால், 14, 15 வயது மாணவியர் இருவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] வேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உ[illegible]த்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org